# HGH INDIA® 2021

HOME DECOR ▪▪▪ GIFTS ▪▪▪ HOUSEWARE

November 30 - December 3, 2021,
INDIA EXPO CENTRE, GREATER NOIDA, DELHI NCR

Inspiring Business for 10 years

## NEWS 3

A TEXZONE Event
www.hghindia.com

Where business feels at home!


## வசந்த காலம்/கோடைகாலம் 2022

# புத்தம் புதிய வணிக சீசன் தொடங்கி விட்டது

பெருந்தொற்று பாதிப்பின் இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய சரக்கிருப்புகளை ஆராய்ந்து பெறும் வகையில் வீட்டு உபயோக பொருட்களின் வர்த்தகம் 10 ஆம் முறையாக எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சி வாயிலாக நடைபெறவுள்ளது. இதில் பல்வேறு புதிய கண்காட்சியாளர்கள் தங்கள் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் முன்பு எப்போதும் இல்லாத அளவில் எவரும் காணாத தயாரிப்புகளை காட்சிபடுத்தவிருக்கின்றனர்.

பல்வேறு முன்னணி பிராண்டுகள் மற்றும் வழக்கமாக எச்ஜிஎச் இந்தியா நிகழ்ச்சியில் பங்கேற்கும் கண்காட்சியாளர்கள் பல்வேறு பன்முகமாக்கப்பட்ட புதிய தயாரிப்பு வரம்புகளை சேர்த்த வண்ணம் உள்ளனர். அனைவருமே வரும் கோடை காலத்தில் ப்ரத்யேகமான, அதிக திறன்மிகு வணிக வாய்ப்புகள் மற்றும் புதுமையான சரக்கு சேர்க்கை வழிகளை ரீடெய்லர்கள், விநியோகஸ்தர்கள், இன்டீரியர் டிசைனர்கள், கட்டிடகலை நிபுணர்கள் மற்றும் நிறுவன கொள்முதலாளர்களுக்கு உறுதி செய்யவிருக்கின்றனர்.

**டெல்லி, கிரேட்டர் நொய்டாவில் உள்ள இந்தியா எக்ஸ்போ சென்டரில் நவம்பர் 30 - டிசம்பர் 3, 2021** வரை நடைபெறவிருக்கும் எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சியில் பல்வேறு வீட்டு ஜவுளி, வீட்டு அலங்கார பொருட்கள், சிறிய ரக ஃபர்னிச்சர்கள், வீட்டு உபயோக பொருட்கள், மற்றும் பரிசு பொருட்கள் போன்ற பிரிவுகளில் பொருட்களை காட்சிப்படுத்தவுள்ளனர். நாடெங்கும் நடைபெற்ற அரசின் தடுப்பூசி முகாம்கள் மூலம் 112 கோடிக்கும் மேற்பட்ட டோஸ்கள் வழங்கப்பட்டுள்ளன, மூன்றாம் அலைக்கான வாய்ப்புகள் குறைந்து வருவதோடு, தீபாவளிக்கு பின்னரும் கோவிட் தொற்று பாதிப்புகள் குறைந்தே காணப்படுகின்றன. பயண கட்டுப்பாடுகளில் தளர்வு வழங்கப்பட்டுள்ளதால் வர்த்தக மற்றும் தொழிற்துறை பயண பயத்திலிருந்து அனைவரும் விடுபட்டு வருகின்றனர். உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன், கொள்முதலாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகிய இருதரப்பினரும் வணிகத்தில் ஈடுபடவும் தங்களின் நுகர்வோர் தேவைகளை இந்தியாவெங்கும் பூர்த்தி செய்யும் வகையிலும் ஆவலுடன் இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றனர்.

வெற்றிகரமான தீபாவளி சீசன் விற்பனையின் வளர்ச்சி தொடர்ந்து அதிகரித்து வருவதால் வணிகம் மேற்கொள்வதற்கான உறுதி இன்னும் அதிகரித்து வருகிறது.

எச்ஜிஎச் இந்தியா விரிவான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது மற்றும் அனைத்து கண்காட்சியாளர்கள், பார்வையாளர்கள் மற்றும் அவர்களின் பணியாளர்கள் என அனைவரது பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தினை பேணிகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். சமூக இடைவெளி குறித்த அரசின் வழிகாட்டுதல்கள் மற்றும் நிலையான நெறிமுறைகளை கடுமையாக பின்பற்றுவோம்.

ஏற்கனவே கூறியது போல, எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சியில், ஒவ்வொரு பிரிவு வாரியாக காட்சிப்படுத்தவிருக்கும் முக்கியமான கண்காட்சியாளர்களின் தயாரிப்புகள் குறித்த முன்னோட்டங்களையும் மற்றும் சிறு கண்ணோட்டத்தினையும் இங்கு வழங்கியுள்ளோம்.




### வீட்டு ஜவுளித் துறை, வளர்ந்து கொண்டே இருக்கிற

ஒட்டு மொத்த வீட்டு உபயோக பொருட்களின் விற்பனையில் 50% சந்தை பகிர்வினை கொண்டு வீட்டு உபயோக பொருட்கள் பிரிவில் நன்றாக வளர்ச்சியடைந்து சிறப்பாக செயலாற்றி வரும் பிரிவாக வீட்டு ஜவுளித்துறை அமைந்துள்ளது. மேலும், நகர்ப்புற மற்றும் கிராமப்புற சந்தைகளில் இன்னும் அதிக வளர்ச்சியினை அடைவதற்கான வாய்ப்புகள் உள்ளது. வளர்ந்து வரும் 100 ஸ்மார்ட் நகரங்கள், வகை II மற்றும் வகை IIIஇல் பட்டியிலிடப்பட்ட நகரங்களில் அதிகரித்து வரும் நுகர்வோர் மற்றும் ரீடெய்ல் விற்பனைகள் மூலம் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மேம்பட்டு வருகின்றது. எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சி, வீட்டு ஜவுளித்துறை பிரிவின் கீழ் படுக்கை மற்றும் குளியலுக்கான துணி, ஃபர்னிஷிங் ஃபேப்ரிக்குகள், அலங்கார உடைகள், ஜன்னல் மறைப்புகள், சூரிய ஒளி பாதுகாப்பு துணிகள், மெத்தைகள் மற்றும் ஸ்லீப் ப்ராடக்ட்கள், டேபிள் மற்றும் கிச்சன் லினென், கார்பெட்டுகள் மற்றும் தரை விரிப்புகள் போன்ற பல்வேறு தரப்பிலான தயாரிப்புகளை காட்சிப்படுத்தவுள்ளது. இந்த பிரிவில் நுகர்வோர்கள் மற்றும் வர்த்தகர்கள் அறிந்த ஒரு சில முன்னணி பிராண்டுகள் மட்டுமே உள்ளனர். எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சியில் பல்வேறு வழக்கமான பிராண்டுகளுடன் புதிய கண்காட்சியாளர்களும் தங்கள் புதிய தயாரிப்புகளை காட்சிப்படுத்தி வீட்டு ஜவுளித்துறை பிரிவில் தங்களின் பிராண்டினை பிரபலப்படுத்த ஆவலுடன் காத்திருக்கின்றனர். இந்திய சந்தையில் தங்கள் தடத்தினை பதிக்கும் வகையில் புதிய நபர்கள் பலர் பங்கேற்க உள்ளனர்.

ஏசியன் பெயிண்ட்ஸ், குர்ல்-ஆன், ஸ்லீப்வெல், கிங் காயில், பெப்ஸ், ஸ்ரதா டெர்ரி மற்றும் பான் ஓவர்சீஸ் போன்ற முன்னணி நிறுவனங்களிடமிருந்து பல்வேறு புதிய வணிக யோசனைகள் மற்றும் வாய்ப்புகளை எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்வில் பங்கேற்கும் பார்வையாளர்கள் வீட்டு ஜவுளிப் பிரிவில் எதிர்பார்க்கலாம்.

மஸ்புர், பொடீக் லிவிங் அண்ட் லேயர்ஸ் (இண்டோ கவுன்ட்), டைசைடெக்ஸ், சரோம், J & Y ஃபேப்ரிக்ஸ் (இந்தியன் ட்ரபெ), நியூ கேஸ்ட்ல் (தேவா டெக்ஸ்டைல்ஸ்) போன்ற முன்னணி நிறுவனங்களும் இயல்பான கண்காட்சியாளர்களும் தங்களின் புதிய டிசைன்கள் மற்றும் கலெக்சன்களை வளர்ந்து வரும் கோடை கால சீசனிற்கேற்ப காட்சிப்படுத்தவிருக்கிறார்கள்.

எச்ஜிஎச் இந்தியா நிகழ்ச்சி 2012 ஆம் ஆண்டு தொடங்கியது முதல், மஸ்பர், தொடர்ந்து கண்காட்சியில் பங்கெடுத்து வருகிறது மற்றும் அனைவரும் அறிந்த வீட்டு ஜவுளித்துறை பிராண்டாக தங்களின் தயாரிப்புகளை விற்பனை செய்து வருகிறது. இந்தியாவெங்கும் உள்ள நகரங்களில் தங்களின் விற்பனையினை பெருக்கி வருவதோடு தங்கள் பிராண்டு அங்கீகாரத்தினை ஒருங்கிணைத்து மேம்படுத்தி வருகின்றனர். அலங்கார ஜவுளிகள் முதல் படுக்கை, குளியல் துணிகள், போர்வைகள், சமையலறை மற்றும் டேபிள் லினென், பரிசு தொகுப்புகள், கார்பெட்டுகள், ஏரியா ரக்ஸ், தனியார் மற்றும் வணிக பரிசு தொகுப்புகள் மற்றும் பல்வேறு வகையான வீட்டு ஜவுளிகளை தயாரித்து விநியோகித்து வருகின்றனர். மேஸ்பரின் வலிமையே அதன் தயாரிப்புகளில் உள்ள நிறங்களாகும், இதன் மூலம் ஒட்டுமொத்த இன்டீரியரும் அழகு பெறும், உதாரணமாக அலங்கார பொருட்கள், படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள் மற்றும் பல. வண்ணங்கள் மற்றும் உயர் தரமிக்க தயாரிப்புகள் அதிக திறன்மிக்க விற்பனைக்கு வழி வகுக்கின்றன.

### ஃபர்னிஷிங் ஃபேப்ரிக்குகள்

அலங்கார ஃபர்னிஷிங்குகள், மெத்தை ஃபேப்ரிக்குகள் மற்றும் கர்டெய்ன் பிரிவுகளில் தேவைகள் அதீத போட்டி மிகுந்த சந்தையில் புதிய வீடுகளின் கட்டுமானம் மற்றும் வீட்டு உபயோக பொருட்களின் வளர்ச்சியால் வளர்ந்து




வருகின்றன. **டிசிடெக்ஸ் ஃபர்னிஷிங்க்ஸ், ஜே அண்ட் ஒய் (இந்தியன் ட்ரபே), சரோம், நியூ கேஸ்ட்ல், மைக்ரோஃபைபர்ஸ், லக்ஸார்** போன்ற முன்னணி ஃபர்ன்ஷிங்க் பிராண்டுகள் எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சியில் புதிய கண்டுபிடிப்புகளை தொடர்ந்து காட்சிபடுத்தவுள்ளனர்.

இப்பிரிவில் வணிகம் தனித் தனியே பிரிந்து இருந்தாலும் பிராண்டை விளம்பரப்படுத்தி ஒருங்கிணைப்பதற்கான வழிகள் ஏராளமாக உள்ளன. எனவே, **ஏசியன் பெயிண்ட்ஸ்** மற்றும் மும்பை, டெல்லி, பானிபட், சூரத், அகமதாபாத், ஜெய்ப்பூர், பெங்களூரு போன்ற நகரங்களில் உள்ள பல நடுத்தர நிறுவனங்கள், வளர்ச்சியடைந்த இறக்குமதியாளர்களையும் தாண்டி ஆச்சரியமிக்க பல்வேறு புதிய யோசனைகளை இப்பிரிவில் கொண்டு வரவுள்ளனர். நாடெங்கும் உள்ள வீட்டு ஜவுளித்துறை, வீட்டு அலங்கார

கண்டுபிடிப்புகள் ▪ டிரெண்டுகள் ▪ ப்ராடக்ட்ஸ் ▪ சோர்ஸஸ் ▪ வாய்ப்புகள்

# வீட்டு ஜவுளி பொருட்கள், வீட்டு அலங்கார பொருட்கள் மற்றும் வீட்டு உபயோக & பரிசு பொருட்களின் கண்ணோட்டம்

பொருட்கள் மற்றும் ஃபர்னிஷிங் ரீடெய்லர்கள் போன்ற ஆயிரக்கணக்கான நபர்கள் ஏற்கனவே பதிவு செய்து புத்தம் புதிய தயாரிப்புகள் மற்றும் புதிய வணிகம் பலவற்றை தங்களின் புதிய மற்றும் வாடிக்கையான விநியோகஸ்தர்களிடம் பெற ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

**டிசிடெக்ஸ்,** வீட்டு ஜவுளி மற்றும் ஃபர்னிஷிங் ஃபேப்ரிக்குகள் தயாரிக்கும் முன்னணி பிராண்டுகளுள் ஒன்று. வெல்வெட்ஸ். சென்னெலெ, டமாஸ்க்ஸ், எம்ப்ராய்டரி மற்றும் ஷீர் கர்டெய்ன்ஸ், மேட்-அப்ஸ் மற்றும் இது போன்ற பல்வேறு ஆடம்பரமான ஃபர்னிஷிங்குகளை காட்சிபடுத்தவுள்ளனர். இத்தயாரிப்புகள் ஒட்டுமொத்தமாக அதிக அளவில் ஒரே இடத்தில் கிடைப்பதன் மூலம் கொள்முதல் செய்பவர்கள் தயாரிப்புகளை வெவ்வேறு வாடிக்கையாளர்களுக்கேற்ப மற்றும் இன்டீரியர் டிசைன் ஸ்டைல்களுக்கேற்ப விற்பனை செய்யும் வாய்ப்பினை பெற முடியும்.

**இந்தியன் ட்ரபே** தங்களின் **ஜே அண்ட் ஒய் ஃபேப்ரிக்ஸ்** மூலம் சந்தையில் ப்ரிண்டட் ஃபேப்ரிக்ஸ், வெல்வெட்ஸ், ஃப்ளாட் மற்றும் டெக்ஸ்சர்டு ஃபேப்ரிக்குகள் பிரிவில் முன்னணி பிராண்டாக முன்னேறியுள்ளனர். மெத்தை ஃபேப்ரிக்ஸ் மற்றும் நீளத்திற்கேற்ப வெட்டி வழங்கப்படும் கர்டெயின்கள் போன்றவை வாடிக்கையாளர்கள் மீது இவர்களின் ஆர்வத்தினை காண்பிக்கிறது. நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான திரு ஜெயேஸ் டேவ் அவர்கள் கூறியது: எச்ஜிஎச் இந்தியா 2021 புதிய வணிக வாய்ப்புகளை வட இந்தியாவில் பெறவும் மற்றும் வளர்ந்து வரும் தீபாவளி நாட்களுக்கு பிறகான சீசனை ஆராய்ந்து புது தயாரிப்புகளை காணவும் உதவும் என நம்புகிறேன்.

**சரொம்,** பொருட்கள் மற்றும் வடிவமைப்புகளில் தனித்தன்மையினை வெளிப்படுத்துவதாலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச வரம்புகளை ஒருங்கிணைப்பதாலும் ஃபர்னிஷிங் துறையில் முன்னணி பிராண்டாக உள்ளனர். இவர்கள் புதிய யோசனைகளை மெத்தை, லெதேர்ரெட், திரைச்சீலை மற்றும் அலங்கார ஃபேப்ரிக்குகளில் கொண்டுவரவிருக்கின்றனர்.

**பிக்ஷு ஃபேப்ரிக்ஸ்** நிறுவனம் வளர்ந்து வரும் ப்ராடக்ட்களை ப்ளாக்அவுட், பாலிஸ்டர், வெல்வெட், ஷீர் மற்றும் பாலி கேன்வாஸ் போன்ற பல்வேறு தரத்தில் ரெடிமேட் கர்டெயின்களை அறிமுகம் செய்யவிருக்கின்றனர். பிக்ஷு தங்களின் முதன்மை வணிகத்தினை காட்சிபடுத்தவுள்ளனர், கர்டெயின்கள், சோஃபாஸ், குஷன் கவர்கள், பெட் கவர்கள் போன்றவற்றில் கலை நயமிக்க ஃபர்னிஷிங் ஃபேப்ரிக்குகள் மற்றும் உள்ளூர் சந்தைக்கேற்ற பிற ஜவுளி தயாரிப்புகளை காட்சிப்படுத்தவுள்ளனர்.

மேலும், எச்ஜிஎச் இந்தியா நிகழ்விற்கு வரவிருக்கும் நபர்கள் **ஆர்டெக்ஸ், அசாடீப், ஃபேப்ரிக் கிங்ஸ், இண்டிகோ இன்டஸ்ட்ரீஸ், லக்சோர் இம்பெக்ஸ், சுஜாதா** மற்றும் பிற இது போன்ற பிராண்டகளிடமிருந்து புதிய டிசைன்கள் மற்றும் தயாரிப்பு யோசனைகளை காணும் வாய்ப்பினை பெறலாம்.

## பெட் & பாத் டெக்ஸ்டைல்ஸ்

ஒவ்வொரு வருடமும் இந்தியாவில் வீட்டு உபயோக பொருட்களிடன் எண்ணிக்கை அதிகரித்து வரும்போது, இப்பிரிவில் தேவைகள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றது, இப்பிரிவு மிகப்பெரிய மற்றும் பழமையான இந்திய ஜவுளி சந்தையாக இருப்பதால், பெட் மற்றும் பாத் டெக்ஸ்டைல்ஸ் செயல்பாட்டினையும் தாண்டி சுகாதாரம் மற்றும் தோல் பாதுகாப்பு மீது கவனம் செலுத்த வேண்டும், குளியலறை மற்றும் படுக்கையறையினை அலங்கரிக்கும்




தயாரிப்புகளையும் உருவாக்க வேண்டும். எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சி புதிய மற்றும் முன்னணி நிறுவனங்கள் மூலம் பல்வேறு புதிய தயாரிப்புகளை இம்முறை காட்சிபடுத்தவுள்ளது.

**இன்டோ கவுண்ட்** நிறுவனம் பெட்ஷீட்டுகள் மற்றும் மெத்தைகளை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யும் மிகப் பெரிய நிறுவனங்களுள் ஒன்றாகும். இந்திய உள்நாட்டு சந்தையில் நேரடியாக மெத்தை சார்ந்த தீர்வுகளை சிறப்பாக வழங்கக் கூடிய நிறுவனமாகவும் உள்ளது. எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சியின் இந்த நிறுவனத்தின் பிராண்டான பொடீக் லிவிங் அண்ட் லேயர்ஸ் மூலம் புது வித தூக்க அனுபவத்தினை வழங்க தயாராக உள்ளனர். மேட்சிங் மற்றும் காம்ப்ளிமென்ட்ரி ஷீட்கள், கம்ஃபோர்டர்கள், டுவெட் கவர்கள், ஃகுய்ல்ட்ஸ், தலையணைகள், ஷாம்ஸ் மற்றும் ஸ்கர்ட்ஸ் போன்றவற்றை உள்ளடக்கிய ஃபேஷன் பெட் அனுபவம் பெறத் தயாராகுங்கள். அன்றாட பயன்பாட்டு பெட்களில் மெத்தை பேட்கள், டவுன் ஆல்ட் கம்ஃபோர்டர், நிரப்பிய தலையனைகள் மற்றும் ப்ரொடக்டர்கள் இருக்கும். இன்டோ கவுன்ட் நிறுவனம் ஒரே சமயத்தில் சீராக அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து உற்பத்தி மற்றும் சேவைகளை ஒருசேர கவனித்து வருகிறது. சலுகைகள் ரீடெய்ல் விற்பனையாளர்களுக்கு மட்டுமல்லாமல் ஹோட்டல்கள் போன்ற நிறுவன வாடிக்கையாளர்களுக்கும் கிடைக்கும்.

தேசான் குழுமத்தினை சார்ந்த **க்ருஷ்ணா கோடெக்ஸ்** நிறுவனம் **பான்ஹியூர்** எனும் பிராண்டினை அறிமுகம் செய்துள்ளது, இதன் மூலம் உயர் தர டெர்ரி டவல்களை இந்தியா மற்றும் சர்வேதச நாடுகளில் விற்பனை செய்து வருகிறது. டெர்ரி டவல்கள், பாத் ரோப்ஸ் மற்றும் செருப்புகள், மெல்லிய டவல்கள், பீச் டவல்கள், குழந்தைகளுக்கான டவல்கள், முகத்திற்கான டவல்கள், பரிசு செட்கள் போன்ற பல தயாரிப்புகளை காட்சிபடுத்தவிருக்கின்றனர்.

**ஸ்ரதா டெர்ரி ப்ராடக்ட்ஸ்,** கோவை மாவட்டத்தை சேர்ந்த இந்தியாவின் முன்னணி நிறுவனம் மற்று உயர்தரமிக்க டவல் பிராண்டாக அறியப்படும் **மைக்ரோகாட்டான்** மூலம் சர்வதேச அளவில் தங்களின் தடம் பதித்து புகழ் பெற்ற நிறுவனம், இம்முறை பல்வேறு புதிய தயாரிப்புகளை இந்த வகைப்பாட்டின் கீழ் முதல் முறையாக அறிமுகம் செய்து புதிய வணிக பாதைக்கான வழியினை ரீடெய்லர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்காக ப்ரத்யேகமாக உருவாக்க உள்ளனர்.

**பான் ஓவர்சீஸ்,** பாத் மேட்களுக்கு பெயர் பெற்ற முன்னணி நிறுவனமான பானிபட் மாவட்டத்தின் முதன்மை ஏற்றுமதி நிறுவனம் தங்கள் **பேனோ** பிராண்டினை பாத் மேட், பாத் ரக்ஸ், பெட்டிங்ஸ், ரக்ஸ் மற்றும் லைஃபஸ்டைல், டெகரேட்டிவ் மேட்-அப்ஸ் போன்ற பல்வேறு வகைப்பாடுகளில் காட்சிபடுத்தவுள்ளது. இவர்களின் தயாரிப்புகள் தனித்தன்மை கொண்ட வடிவமைப்பு மற்றும் அலங்கார கலைநயமிக்கதாக இருக்கும்.

## மெத்தை மற்றும் ஸ்லீப் டெக்னாலஜி




இந்திய நுகர்வோர்கள் தங்களின் தூக்கத்தின் தரத்தின் மீது அதிக கவனத்தினை செலுத்த தொடங்கியுள்ளனர். ஆரோக்கியமான வாழ்வினை பராமரிக்க உடல் உறுதியினை பராமரிப்பது அவசியம். ஓர் நல்ல, ஆரோக்கியமான தூக்கத்திற்கு பல நிலைகள் மற்றும் காரணிகள் உள்ளன. ஒவ்வொரு தனிநபரின் தூக்கத்தின் தரம் அவர்கள் தேர்ந்தெடுக்கும் ஸ்லீப் ப்ராடக்ட்களை பொருத்தே அமைகிறது.

பிற வீட்டு ஜவுளி பொருட்கள் போல அல்லாமல், அலங்கார பார்வையில் பார்க்கும் போது வடிவமைப்பு மற்றும் நிறங்கள் இப்பிரிவில் முக்கிய பங்காற்றுகின்றன, ஆரோக்கியமான தூக்கம் என்பது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஸ்லீப் ப்ராடக்ட்களில் பயன்படுத்தப்படும் பொருட்களை சார்ந்தது. அதேசமயம் உலகில் தூக்க பயிற்றுநர்கள் மற்றும் ஸ்லீப் க்ளீனிக்ஸ், ஸ்டுடியோஸ் பல உள்ளது அதன் மூலம் தூக்கத்தின் பன்முக பரிமாணத்தினை ஆராய்ந்து அதன் தரத்தினை மேம்படுத்துகிறது. தொழில்நுட்பம் மற்றும் பயன்படுத்தும் பொருட்கள் தூக்கத்தின் தரத்தினை வேகமாக மேம்படுத்தி வருகிறது. இந்த வளர்ச்சியினை புரிந்து கொள்வதன் மூலம் மெத்தைகளின் ஸ்லீப் பிஸ்னஸில் வித்தியாசத்தினை வேறுபடுத்தி காண முடியும்.

எச்ஜிஎச் இந்தியா 2021, ஹால் 14 இல் **வோர்ல்டு ஆஃப் ஸ்லீப்** எனும் பிராண்டின் கீழ் சிறப்பு ஸ்லீப் டெக்னாலஜி பெவிலியனை உருவாக்கியுள்ளோம், இதன் மூலம் ரீடெய்லர்கள் ஸ்லீப் ப்ராடக்டளில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகளை அறிந்து கொள்ள முடியும். இதனை **எச்ஜிஎச் இந்தியா** மற்றும் **ஐஎஸ்பிஎஃப்**(இந்தியன் ஸ்லீப் ப்ராடக்ட்ஸ் ஃபெடரேஷன்) இணைந்து நடத்துகிறது. படுக்கையுடன் கூடிய மெத்தை அமைப்பே தூக்கத்திற்கான கட்டமைப்பாகும். **குர்ல்-ஆன், ஸ்லீப்வெல், கிங் காயில், பெப்ஸ், நில்கமல்** போன்ற முன்னணி பிராண்டுகள் தங்களின் பல்வேறு புதிய தயாரிப்புகளை காயர், ஸ்ப்ரிங், மெமரி ஃபோம், ரப்பர் ஃபோம் மற்றும் தெரபடிக் மெத்தைகள், தலையணைகள் மற்றும் மெத்தைகளுக்கான ப்ரொடக்டர்கள் போன்றவற்றின் கீழ் காட்சிபடுத்தவிருக்கின்றனர்.

மேலும், பல்வேறு புதிய பிராண்டுகளான **ஃப்ரெஷ் அப், ஹோம் ஸ்கேப்ஸ், ஸ்பைன்மேட், காம்ஃபை** போன்ற நிறுவனங்களும் வெவ்வேறு பரிமாணங்களை கொண்டு வரவிருப்பதால் இந்த வர்த்தக பிரிவில் புதிய வணிகத்திற்கான வாய்ப்புகள் பல பெருகும்.

## வீட்டு உபயோக பொருட்கள்: ஸ்மார்ட்டர், இன்னும் அதிக மாடர்ன்




வீட்டு பயன்பாட்டு பொருட்களின் சந்தை இந்தியாவில் வேகமாக வளர்ந்து வருகிறது, ஒவ்வொரு வருடமும் பல்வேறு மாற்றங்களுக்குட்பட்டு மேம்பட்டு வருகிறது, புதிய வகைகள், தரம் மற்றும் அதிக அளவில் பொருட்களின் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. சமையலறை பொருட்கள், சமையல் சாதனங்கள், பாத்திரங்கள், டேபிள்வேர், ஸ்டோரேஜ், சுத்தப்படுத்த உதவும் பொருட்கள், ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் சார்ந்த பொருட்கள், பொதுவான வீட்டு உபயோக பொருட்கள் போன்றவற்றின் தேவை ஒவ்வொரு நாளும் அதிகரித்து கொண்டே செல்கிறது. சமைக்கும் மற்றும் அதனை பரிமாறி உண்ணும் கலாச்சார முறை முதல் இன்றைய மாடர்ன் முறை வரை தற்கால தொழில்நுட்பத்திற்கு இணங்கி முன்னேற்ற பாதையினை அடைந்து வருகிறது. தானாக இயங்கும் சமையலறை சாதனங்கள், நவீன கால மாடர்ன் சமையல் மற்றும் டின்னர் செட்டுகள் புதிய வணிக வாய்ப்புகளை பெருக்குவதோடு சந்தையில் புதிய இடங்களை உருவாக்குகிறது.

## சமையல் பாத்திரங்கள்

இந்திய சமையல் தற்போது வெளிநாட்டு மற்றும் நகர்ப்புற சமையல் பாங்கிற்கேற்ப செயல்பட தொடங்கியுள்ளது. ஆரோக்கிய நோக்கத்துடன் வசதிகேற்ப ஹோம் ஃபேஷன் டிரெண்ட்களை பின்பற்றி செயல்படத் தொடங்கியுள்ளது. சர்வதேச தரத்தினாலான ப்ரஷர் குக்கர்களை இந்திய நுகர்வோர்கள் வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர் மற்றும் ஃப்ரையிங் பேன் மற்றும் பிராண்டட் தயாரிப்புகள் மீதும் ஆர்வம் பெருகி வருகிறது. ரீடெய்ல் விற்பனை புதிய சமையலறை தயாரிப்புகளை பயன்படுத்த தொடங்குவதன் மூலம் மட்டுமே இளம் வயதினரையும் மற்றும் நுகர்வோர்களையும் தங்கள் வசம் ஈர்க்க முடியும்




**ஆட்டோப்ரெஷ் இந்தியா** நிறுவனம் **ஸ்டஹல்** எனும் புதிய முன்னணி பிராண்டின் கீழ் பல்வேறு வகையான

10 ஆம் ஆண்டு பதிப்பு: நவம்பர் 30-டிசம்பர் 3, 2021, இந்தியா எக்ஸ்போ சென்டர், கிரேட்டர் நொய்டா, டெல்லி

# ஸ்லீப் டெக்னாலஜி | சிறிய ரக ஃபர்னிச்சர் | ஸ்மார்ட் குக்கிங் | ஸ்வச் பாரத்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் மற்றும் ஃபரையிங் பேன்கள், ப்ரஷர் குக்கர்ஸ், அனைத்து மெட்டீரியல்களிலும் வோக்ஸ், நான் ஸ்டிக் பாத்திரங்கள் மற்றும் பலவற்றை காட்சிபடுத்தவிருக்கிறது. யுனைடெட் எக்டா, ஒகே இன்டஸ்ட்ரீஸ், நொல்டா, செல்லோ. எடபிள்யூகே, எஸ்என்பி என்டர்ப்ரைஸஸ் மற்றும் ப்ஹானொபா என்டர்ப்ரைஸஸ் போன்ற நிறுவனங்களும் சமீபத்திய நான்- ஸ்டிக் சமையலறை பாத்திரங்கள் மற்றும் பொருட்களை




காட்சிப்படுத்தவுள்ளனர். எச்ஜிஎச் இந்தியா ஹால் 10-இல் அமைக்கப்படும் **ஸ்மார்ட் குக்கிங்** அரங்கு இந்தியாவில் சமையலறை பொருட்களில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தின் மீது கவனத்தினை செலுத்தி புதிய நுகர்வோர் தேவைகளை கருத்தில் கொண்டு செயல்படும்

### டேபிள்வேர்

செராமிக்ஸ், பாத்திரங்கள், கண்ணாடி பொருட்கள், கட்லரி, சேர்வ்வேர், பார்வேர் போன்ற பல்வேறு வகைப்பாடுகளின் கீழ் எச்ஜிஎச் இந்தியா தயாரிப்புகளை வகைப்படுத்தவுள்ளது. புதிய தயாரிப்புகள், புதிய டிசைன்கள் மற்றும் புதிய யோசனைகளின் கீழ் ஜெய்ப்பூர், குர்ஜா, மும்பை, டெல்லி, குர்க்ராம், கொல்கத்தா மற்றும் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் இந்திய நகரங்களிலிருந்து வரும் கண்காட்சியாளர்கள் காட்சிபடுத்தவுள்ளனர்.

**க்ளே கிராஃப்ட்** நிறுவனம் தங்களின் புதிய டின்னர்வேர் மற்றும் சேர்வ்வேர் புதிய கலெக்சன்களை காட்சிப்படுத்தவுள்ளனர். இங்கு தங்களின் பல்வேறு டேபிள்டாப் செராமிக் தயாரிப்புகளை இந்திய சந்தையில் அறிமுகம் செய்ய உள்ளனர். 'சர்வதேச பிராண்டுடன் எங்கள் சமீபத்திய ஒருங்கிணைப்பை வெளிக்காட்டுவதில் நாங்கள் பேரார்வம் கொண்டுள்ளோம். சர்வதேச பிராண்டான '. மென் லிட்டில் மிஸ்' உடன் இணைந்து பல்வேறு புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தவிருக்கிறோம், பல புதிய வகையான காஃபி மக்குகள், புதிய மோனோக்ராம் கலெக்சன்கள் ஹேப்பினஸ் இஸ் மற்றும் இந்தியா சர்க்கஸ் டிசைனர் டேபிள்வேர் போன்றவை ஒரு சில எடுத்துக்காட்டுகளாகும் என நிறுவனம் பகிர்ந்துள்ளது.

**கோரெல்லெ** நிறுவனம் நன்கு அறிந்த பல்வேறு நம்பகமான கண்ணாடி மற்றும் டிஸ்வேர் தயாரிப்புகளை சந்தைப்படுத்தி வருகிறது. கோரெல்லெ என்பது தற்காலிக கண்ணாடி தயாரிப்பாகும், இதில் இரண்டு வகையான கண்ணாடிகள் மூன்று அடுக்குகளாக லேமினேட் செய்யப்பட்டிருக்கும். இவர்களின் வடிவமைப்பு மாடர்ன் அமெரிக்க மற்றும் தென் ஐரோப்பிய பாணியில் இருப்பதால் இந்திய கலாச்சாரத்தோடு இணைந்து அழகிற்கு மெருகூட்டும் வகையில் இருக்கும்.

**ரோக்ஸ்,** கொல்கத்தாவினை தலைமையகமாக கொண்ட முன்னணி பிராண்டு, இவர்கள் ஒட்டுமொத்தமாக டேபிள்வேர், க்ளாஸ்வேர், ஸ்டோரேஜ், பாட்டில்கள், சமையல் பாத்திரங்களை ப்ரீமியம் மற்றும் ஒட்டுமொத்த பிரிவுகளுக்கு விற்பனை செய்பவர்களாக திகழ்கின்றனர்.

**பாரத் பாட்டரீஸ், ஸ்டோன் சஃபையர் இந்தியா, ஹிட்கரி** மற்றும் **யு.பி. செராமிக்ஸ்** போன்ற நிறுவனங்கள் போன் சைனா மற்றும் மெலாமை டேபிள்வேர், சமையல் உபகரணங்கள், டின்னர்வேர், ஸ்டோரேஜ் பொருட்கள், பாட்டில்கள் மற்றும் காற்று சுத்திகரிப்பு சாதனங்களை காட்சிப்படுத்தும்.

### ஸ்டோரேஸ் & பிளாஸ்டிக்குகள்

எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சியில் பார்வையாளர்கள் இப்பிரிவில் பல்வேறு வகைகளையும் புதுமைகளையும் எதிர்பார்க்கலாம். அதிவேகமாக வளர்ந்து வரும் முன்னணி நிறுவனங்கள் வீட்டு உபயோக பொருட்களின் ஸ்டோரேஜ், ப்ளாஸ்டிக்ஸ், பொதுவான வீட்டு உபயோக, சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு பிரிவுகளின் கீழ் நிகழ்ச்சியில் பங்குபெற உள்ளனர்.

**செல்லோ, சிக்னோராவேர், ஜேபீ** போன்ற நிறுவனங்கள் பிளாஸ்டிக்காலான பல்வேறு சமையலறை பொருட்கள், ஸ்டோரேஜ், பாத்ரூம், சுத்திகரிப்பு மற்றும் பொதுவான பொருட்களை காட்சிப்படுத்தவுள்ளனர்.

### திரைசீலைகள் & ஜன்னல் அலங்கார பொருட்கள்

நவீன இந்திய வீடுகளில் திரைசீலைகள் வீட்டின் அலங்கார மற்றும் வடிவமைப்பின் அங்கமாக மாறிவிட்டது.

ஜன்னல் மறைப்புகள் பிரிவு பொதுவாக பல வகைகளில் செயல்படக் கூடியது அடிப்படையில், இதனை (1) வெளிப்புறத்திலிருந்து பார்ப்பதை மறைக்கும் வகை (2) ஒளியிலிருந்து பாதுகாப்பளிக்கும் வகை என பிரிக்கலாம். இன்னும் சுருக்கமாக கூறினால் வெளிப்புற வெப்பம் மற்றும் ஒளியிலிருந்து பாதுகாப்பளிக்கும் கவசம், சில நேரங்களில் குளிரிலிருந்தும் நம்மை காக்கும். இதனை உட்புறமாக அல்லது வெளிப்புறமாக பொருத்தலாம். அலுமினியம், துணி, மரம், காகிதம் மற்றும் ஸ்டீல் வகைகளில் இவை பெரும்பாலும் கிடைக்கின்றன. மேலும் இவை திறப்பதற்கும், மூடுவதற்கும் உரிய தொழில்நுட்பத்துடன் வருகின்றன, இவை தானாக இயக்கும் வகையில் கூட கிடைக்கின்றன. கடந்த இருபது ஆண்டுகளில் ஸ்கீரீன்களுக்கு மாற்றாக இவை ஆதிக்கம் செலுத்த தொடங்கியிருக்கின்றன. மாடர்ன் வீடுகள், அலுவலகங்கள், ஹோட்டல்கள் போன்ற இடங்களில் இதனை அதிகம் காணலாம். இவை அதிக பாதுகாப்பினை வழங்குகின்றன. மேலும் இதனை சுத்தப்படுத்துவதும் எளிது.

ஒரு பக்கம் சந்தை ஆட்டோமேஷன் மற்றும் டிசைன் கண்டுபிடிப்புகள் மூலம் முன்னேறி சென்று கொண்டிருக்கிறது. புதிய வகைகளில் கட்டமைக்கப்படும் அறைகளில் இவற்றை நேரடியாக பொருத்தும் வகையிலும் கிடைக்கின்றன. அதிக மாடர்ன் மற்றும் நவீன டிசைன் ஸ்டைல்கள் ரொமான்டிக் அல்லது பாரம்பரிய டிசைன்களை விட தெளிவாக பொருந்துகின்றன.

**டெகோ விண்டோ, விஎன்டோ, கசாகே, நோவா, டச் ப்ளின்ட்ஸ், மார்கோபோலோ, மார்ஷல்ஸ், அட்கோ, அர்டெக்ஸ் ஓவர்சீஸ்** போன்ற முன்னணி நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக வெர்டிகல் ப்ளின்ட்ஸ், வெனெடியன் ப்ளின்ட்ஸ், ரோலர் ப்ளின்ட்ஸ் மற்றும் ரோமன் ப்ளின்ட்ஸ் போன்றவற்றை வழங்கி வருகின்றனர். மேலும் இவர்கள் தங்களின் சமீபத்திய வரம்பிலான ப்லின்ட்ஸ் மற்றும் கர்டெயின் அலங்கார பொருட்கள், ஆட்டோமேஷன், ட்ரேபரி மற்றும் தொழில்நுட்பங்களை கண்காட்சியில் அறிமுகம் செய்ய இருக்கின்றனர். பார்வையாளர்கள் பல புதிய தொழில்நுட்பங்களை பார்த்து தங்களின் வணிகத்தினை புதிய தயாரிப்புகள் மூலம் மேம்படுத்திடலாம்.

### தேவை அதிகரித்து வரும் வால்பேப்பர்ஸ் வகைப்பாடு

இந்திய வால்பேப்பர் சந்தை வருடத்திற்கு 30-40% வரை வளர்ச்சி காணும் என வல்லுநர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.




நகர்ப்புற மக்கள்தொகை பெருக்கம், மாறிவரும் வாழ்க்கை பாங்கு மற்றும் சிறந்த டிசைன் சார்ந்த விருப்பங்கள் போன்றவை இந்த ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாகும். சந்தையில் வால்பேப்பர்களின் விற்பனை ஏற்றத்தினை கண்டு வருகிறது மற்றும் தயாரிப்பு பொருட்களின் தரத்திலும், விலைகளாலும் பல முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

**மார்ஸல்ஸ் வால்கவரிங்க்ஸ், ஏசியன் பெயிண்ட்ஸ் மற்றும் அட்கோ இன்டீரியர்ஸ்** போன்ற முன்னணி நிறுவனங்கள் பல எச்ஜிஎச் இந்தியா நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர். ஜெர்மன் நாட்டை சேர்ந்த **எரிஸ்மான்** பிராண்டினை **ராயல் வால்பேப்பர்** நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது. அலங்கார கண்ணாடி பொருட்களுக்கு பெயர் பெற்ற **டஹெரி டெகார்,** தனிப்பயனாக்கப்பட்ட வால்பேப்பர்களுக்கு பெயர் பெற்ற வால் எம்பயர் போன்ற நிறுவனங்களும் தங்களின் புதிய தயாரிப்புகளை காட்சிப்படுத்தவுள்ளனர். மேலும், பல வால்பேப்பர் ஏற்றுமதியாளர்கள் மற்றும் தேசிய அளவிலான விநியோகஸ்தர்கள் தங்களின் சர்வதேச வரம்பிலான வால்பேப்பர்களை காட்சிப்படுத்தவுள்ளனர்.

**மார்ஷல்ஸ் வால்கவரிங்** நிறுவனம் வால்பேப்பர்கள் பிரிவில் இந்தியாவிலேயே முன்னணி நிறுவனமாக உள்ளது. எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சியில் இவர்கள் பல்வேறு டிசைன்கள் மற்றும் பல்வேறு பொருட்களால் செய்யப்பட்ட தயாரிப்புகளை ஐரோப்பிய டிசைன் பாணியின் மீது முக்கியத்துவம் செலுத்தி காட்சிப்படுத்தவுள்ளனர். மார்ஷல்ஸ் நிறுவனம் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இருந்து கிராண்டெகோ, ராசெ, சிற்பி, ஜாம்பைஜ, ஒமெக்சோ, மார்பர்க் மற்றும் கசாடெகோ போன்றவற்றை ஏற்றுமதி செய்யக் கூடிய ஓர் ப்ரத்யேக நிறுவனமாகும்

### வளர்ந்து வரும் தரை விரிப்புகள் மற்றும் தரை கவரிங் பிரிவு

கார்ப்பெட்டுகள் மற்றும் பிற தரை விரிப்புகள் போன்றவை வீட்டின் அலங்காரத்திற்கு மெருகூட்டும் வகையில் டிரெண்டிற்கேற்ப மாற்றங்கள் கண்டு வருகின்றன. வீடு, அலுவலகம், கடைகள் மற்றும் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வீட்டு உபயோக பிரிவில் இப்பொருட்களின் விற்பனை வேகமெடுத்து வருகிறது. ரக்ஸ் மற்றும்




கார்பெட்டுகளின் முக்கியமான வலிமையே அதன் அலங்கார தன்மையினை தாண்டி சூழலுக்கேற்ப செயல்படவும், அறை ஒலிகளை கட்டுப்படுத்தவும் கூட உதவுகின்றன. அதிகப்படியான இந்திய நுகர்வோர்கள் மூலம் இப்பிரிவு அதிக அதிக வளர்ச்சியினை கண்டு வருகிறது. அனைத்து வகையான தரைவிரிப்புகள், ஆடம்பரமானது முதல் ப்ரீமியம் வரை, அலங்காரம் முதல் செயல்பாட்டின் அடிப்படையில் வரை, மாடர்ன் முதல் கலாச்சார வடிவம் வரை சந்தையில் கிடைக்கின்றன. இயற்கை மற்றும் சிந்தெடிக் ரக்ஸ் மற்றும் தரை விரிப்புகளின் தேவை ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது

சர்வதேச சந்தையில் கைகளால் உருவாக்கப்படும் இந்திய தரைவிருப்புகள் 40% பங்கினை பெற்றுள்ளன. அவற்றின் கலைநயமிக்க படைப்பு மற்றும் பாரம்பரியமிக்க அலங்கார பாங்கு போன்றவை நவீன தேவைக்கேற்ப மாற்றம் கண்டுள்ளன. ஏற்றுமதி செய்வது இந்திய வணிகர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றாலும் உள்ளூர் சந்தையும் அதிவேக வளர்ச்சி கண்டு வருகிறது. கைகளால் நெய்யப்பட்ட, கைவினை மற்றும் கைகளால் நிரப்பிய, இயந்திரத்தால் உருவாக்கப்பட்ட அனைத்து வகையான ரக்ஸ் மற்றும் கார்ப்பெட்டுகள் கிடைக்கும். **கலீன், வில்லேஜ் வீவர்ஸ், ஒயிட் ஐய்ஸ், நாராயண் கார்பெட்ஸ் போன்ற நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்த உள்ளனர்.**

**கார்பெட் எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன் கவுன்சில் (CEPC),** சென்ற வருடத்தினை போல 20 முன்னணி தயாரிப்பாளர்கள் மற்றும் கைவினை கார்பெட் ஏற்றுமதியாளர்களை படோஹி, வாரணாசி, ஜெய்ப்பூர், பிகனெர், ஆக்ரா மற்றும் டெல்லி போன்ற பிற நகரங்களில் இருந்து அழைத்து வரவுள்ளனர்.

பிற முன்னணி உற்பத்தியாளர்கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்கள் தங்களின் **க்வாலீன், ரக்ஸ் கான்செப்ட், சுகர்க்ராஸ்** போன்ற கலெக்சன்களை வழங்கவுள்ளனர்.

உதாரணமாக **ரக்ஸ் ஓவர்சீஸ்,** கைகளால் நெய்யப்பட்ட கார்ப்பெட்டுகளை தயாரிப்பதில் வல்லுநர்களாவர். இவர்கள் பாரம்பரிய வடிவங்களை காட்சிப்படுத்தோடு புதிய வகை 'துருக்கி கார்ப்பெட்' மற்றும் 'அப்ஸ்ட்ராக்ட்', நவீன டிசைன்களால் ஈர்க்கப்பட்ட 'மாடர்ன் ஆர்ட்' போன்ற கலெக்சன்களையும் காட்சிபடுத்தவுள்ளனர்.

**கலீன் லைஃப்ஸ்டைல்** நிறுவனம் உள்நாட்டு தறி மூலம் இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்பட்ட கார்பெட்டுகளை வர்த்தகம் செய்வதில் பெயர் பெற்றுள்ளனர். இவர்கள் இயந்திரத்தினால் உருவாக்கப்பட்ட தங்களின் கார்ப்பெட்டுகளை கைகளால் செய்யப்பட்ட உயர்தர ரக்ஸ்களுடன் காட்சிப்படுத்த உள்ளனர். தரமான வாழ்க்கை பாங்கின் ஓர் அங்கமாக கார்பெட்டுகள் மற்றும் தரைவிரிப்புகள் மாறிவருகின்றன.

**நார் வாரியம்** மற்றும் **தேசிய சணல் வாரியம்** இணைந்து நார்

மேலும் விவரங்களுக்கு எங்கள் இணையதளத்தினை பார்வையிடவும் www.hghindia.com அல்லது அழைக்கவும்: மும்பை: தொலைபேசி. +91 (22) 2421 4111, டெல்லி: தொலைபேசி. +91 (11) 2571 4111

மற்றும் சணல் பிரிவினை சார்ந்த தயாரிப்பாளர்களை குழுவாக இணைத்து அவர்களின் டோர் மேட், சணல் மற்றும் சணல் கலந்த கார்பெட்டுகள், தரைவிரிப்புகள் , ஷாப்பிங் மற்றும் ஃபேஷன் பேக்குகள் மற்றும் அலங்கார தயாரிப்புகளை காட்சிப்படுத்தவுள்ளனர்.

## வீட்டு அலங்கார பொருட்கள்

வால்பேப்பர் மற்றும் வால் டெகார் பிரிவில் தரை, மேஜை, சுவர்கள் மற்றும் சீலிங்குகளுக்கான அலங்கார பொருட்கள், மெழுகுவர்த்தி தாங்கிகள், அலங்கார மெழுகுவர்த்திகள், மணம் கமழும் நறுமண பொருட்கள், பானைகள், செயற்கை மலர்கள் மற்றும் புல், சிலைகள்,







வேஸ்கள், புகைப்பட ஃப்ரேம்கள், ஆர்ட் ஒர்க், கலைநயமிக்க பெயிண்டிங்குகள் போன்ற பல்வேறு வரம்பிலான தயாரிப்புகளை டெல்லி, மும்பை, மொரதாபாத், ஃபிரோசாபாத், ஆக்ரா, ஷாரன்ப்பூர், லக்னோ, ஜெய்ப்பூர், ஜோத்பூர், காஷ்மீர், ராஜ்கோட், ஹைதராபாத் போன்ற நகரங்களின் கைவினை கலைஞர்கள் மூலம் காட்சிப்படுத்தவுள்ளது.

மொரதாபாத்தினை சேர்ந்த **பாராமவுண்ட்** நிறுவனம் தங்களின் சமீபத்திய மற்றும் சர்வதேச அலங்கார பொருட்களின் கலெக்சன்களை உலோக மற்றும் கண்ணாடி, பித்தளை பிரிவுகளின் கீழ் இந்திய ரீடெய்லர்களுக்கு காட்சிபடுத்தவுள்ளது.

ராஞ்சி நகரை சேர்ந்த **வேதாஸ்** நிறுவனம் எப்போதுமே புதுமையான மற்றும் அழகான சிறிய ரக ஃபர்னிச்சர்கள், சுவர் அலங்கார பொருட்களை அறிமுகப்படுத்தும்

**இபிசிஎச் (கைவினைபொருட்கள் ஏற்றுமதியினை ஊக்குவிக்கும் சபை)** தங்களின் உறுப்பினர்களை கொண்டு கைவினை மற்றும் அலங்கார பொருட்களை கண்காட்சியில் காட்சிப்படுத்தவுள்ளது.

மேலும், கைவினை பொருட்கள் மேம்பாட்டு ஆணையர், ஜவுளித்துறை அமைச்சசம், இந்திய அரசாங்கம் மற்றும் **யுபிஇஏ, சட்டீஸ்கர் ஹஸ்ட் ஷில்ப் விகஸ் போர்டு, நெக்டர் மற்றும் கைவினை மற்றும் கைத்தறி இயக்குநரகம், காஷ்மீர்** போன்ற அமைப்புகள் இந்தியாவின் மறைந்து கிடக்கும் கலை மற்றும் கைவினை தயாரிப்புகளை ரீடெய்லர்களுக்காக வெளிக்கொண்டு வந்து காட்சிப்படுத்தவுள்ளது.

எச்ஜிஎச் இந்தியா ஹால் 10 இல் அமையவுள்ள **இந்திய கலாச்சாரம்** எனும் பெவிலியன், பல்வேறு இந்திய கலை மற்றும் ஓவியங்களை **தேசிய விருது பெற்றவர்களின் கைவண்ணத்தில்** மர சிற்பங்கள், உலோக சிற்பங்கள், மட்பாண்டங்கள், எம்ப்ராய்டரி மற்றும் பல்வேறு வீட்டு உபயோக மற்றும் அலங்கார பிரிவுகளின் கீழ் காட்சிப்படுத்தவுள்ளது

## சிறிய மற்றும் அழகூட்டும் ஃபர்னிச்சர்கள்

வளர்ந்து வரும் சிறிய ரக ஃபர்னிச்சர்கள் எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்வில் முக்கிய பங்காற்ற உள்ளது. வீடு மற்றும் அலுலகத்திலிருந்து பணிபுரிவதற்கான ஹைப்ரிட் மாடல் வளர்ந்து வருவதால் குறிப்பாக இந்தியாவில் அதிவேகமாக வளர்வதால் அதற்கேற்ற தயாரிப்புகளும் காட்சிப்படுத்தபடவுள்ளன.

நகரங்களில் வாழுமிடங்கள் பலவற்றின் விலை அதிகரித்து வருகிறது. வீடுகளில் உள்ள அறைகளின் அளவு குறைந்து கொண்டே செல்வதால் ஃபர்னிச்சர்களின் அளவினை சுருக்கி இடத்தினை சேமிக்க வேண்டியுள்ளது. இன்னொரு பக்கம், அறைகளும் அழகாக இருக்க வேண்டும் என்பதால் பல சிறிய ரக ஃபர்னிச்சர்கள் சமீப காலமாக கவனம் ஈர்த்து வருகின்றன.



**ஏசியன் பெயிண்ட்ஸ், குர்ல்-ஆன், வேதாஸ்** போன்ற பல முன்னணி நிறுவனங்கள் இந்த வகைப்பாடுகளின் கீழ் தங்கள் தயாரிப்பினை அறிமுகம் செய்ய உள்ளனர் மற்றும் முதன் முறையாக தங்கள் வர்த்தகத்தினை தொடங்கவிருப்பதால் ரீடெய்லர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு பல புதிய வாய்ப்புகள் கிடைக்கும் சூழல் உருவாகியுள்ளது. **நெக்டர்** புதிய வாய்ப்புகளை மூங்கில், கேன் ஃபர்னிச்சர், அலங்கார பொருட்கள் பிரிவில் **கிழங்கிந்திய மண்டலத்திலிருந்து** அதிக திறமை கொண்ட உற்பத்தியாளர்கள் மூலம் வழங்கவிருக்கிறது.

பயண கட்டுப்பாடுகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள ஊரடங்கினையும் தாண்டி, இத்தாலி நாட்டை சேர்ந்த ஆறு நிறுவனங்கள் தங்களின் ஃபர்னிச்சர் வகைகளை டெல்லியில் உள்ள இத்தாலிய வர்த்தக கமிஷன் நடத்தும் கேட்டலாக் நிகழ்ச்சி மூலம் காட்சிப்படுத்தவுள்ளது, மேலும் மலேசிய டிம்பர் கவுன்சிலும்(எம்டிசி) மலேசியன் ஃபர்னிச்சர் ஏற்றுமதியாளர்களின் கேட்டலாக் நிகழ்ச்சியினை நடத்தி அனைத்து தகவல்களையும் இந்திய இறக்குமதியாளர்களுக்கு தங்களின் எச்ஜிஎச் இந்தியா பூத் மூலமாக வழங்கவுள்ளனர். எச்ஜிஎச் இந்தியா நிகழ்வில் இது போன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் மேலும் பல வளர்ச்சியடையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

PHOTO SPOT

# உங்கள் தயாரிப்புகளுக்கான தொழிற்முறை புகைப்படம்

அழகான, நேரில் பார்ப்பது போன்ற தோற்றத்தினை புகைப்படங்களில் வழங்குவது ஒரு சிறந்த வீட்டு உபயோக பொருளினை சந்தைப்படுத்த உதவும், வீட்டு உபயோக பொருட்கள், ஃபர்னிஷிங் பேப்ரிக்குகள், மெத்தை, மெத்தை விரிப்பு, அலங்கார பொருட்கள், ப்ளிண்ட், வால்பேப்பர், கார்ப்பெட்ஸ், அனைத்து சமையலறை சாதனங்கள், செராமிக், மண்பானைகள் அல்லது பொதுவான வீட்டு உபயோக பொருட்களும் சந்தைக்கு செல்வதற்கு முன் புகைப்படமாக நுகர்வோரிடம் சென்றடைவது முக்கியத்துவம் பெற்று வருகிறது.

அழகான, கண்களுக்கு இனிய புகைப்படங்கள் ஒருவரின் மனதில் நீங்கா இடம் பிடிக்க பிராண்டு, உற்பத்தியாளர்கள் அல்லது ரீடெய்லர்களுக்கு உதவும். இன்றைய போட்டி மிகுந்த சந்தையில், புகைப்படம் எடுப்பது சந்தையில்



பொருளை விளம்பரப்படுத்துவது முன்பே மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணியாக மாறியுள்ளது.

எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சியில் பங்குபெறவுள்ள கண்காட்சியாளர்கள், பார்வையாளர்களுக்கு தங்கள் தயாரிப்பினை சிறந்த புகைப்படம் எடுப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்து ஒரு முன்னோட்டத்தினை காட்டவிருக்கிறோம். தங்களின் பிராண்டினை விளம்பரப்படுத்தி தேசிய அளவில் பிரபலபடுத்த நினைக்கும் அனைவருக்கும் இது நிச்சயம் உதவும் ஃபோட்டோ ஷூட் எனும் தலைப்பின் கீழ் எச்ஜிஎச் இந்தியா நிகழ்ச்சி இந்த வருடமும் புகழ்பெற்ற புகைப்பட கலைஞரான திரு ஷிராஜ் சந்த் அவர்களுடன் இணைந்து செயல்பட உள்ளது.

ஹால் 15 இல், டிரெண்ட்ஸ் அரங்கிற்கு அருகில் எச்ஜிஎச் இந்தியா மற்றும் ஃபோட்டோஃப்லேக்ஸ் இணைந்து ஃபோட்டோகிராபி ஸ்டுடியோவினை லிவிங் ரூம், பெட்ரூம், கிச்சன் மற்றும் பாத்ரூம் வடிவமைப்புகளுடன் அமைத்திருக்கும். பார்வையாளர்கள் மற்றும் கண்காட்சியாளர்கள் தங்களின் தயாரிப்பினை இந்த ஸ்டுடியோவில் முன் கூட்டியே அனுமதி பெறுவதன் அடிப்படையில் தொழில்முறை ரீதியாக புகைப்படம் எடுக்கலாம். இதற்கு எவ்வித கட்டணமும் வசூலிப்பட மாட்டாது. இதனை தங்களின் விளம்பர மற்றும் வணிக நோக்கத்திற்கு பயன்படுத்தி கொள்ளலாம். இதன் மூலம் ஒரு சிறந்த புகைப்படத்தின் வாயிலாக சந்தையினை அடைவதன் பலன் குறித்து புரிந்து கொள்ள முடியும்.

ஃபோட்டோ ஸ்பாட் இடத்தில் ஷிராஷ் சந்த் அவர்கள் பல வருடங்களாக வீட்டு பயன்பாட்டு பொருட்களை தொழில்முறை ரீதியாக எடுத்த புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். இது கண்களுக்கு விருந்தளிப்பதோடு ஒரு சிறந்த புக்கைப்படக் கலையின் திறன் மற்றும் விளம்பர யுக்திகளின் வெளிப்பாட்டினை அறிந்து செயல்பட உதவும்.

சிறிய பிராண்டுகள் மற்றும் ரீடெய்லர்களின் தயாரிப்புகளை தொழில்முறை ரீதியாக காட்சிபடுத்துவதற்கும் வீட்டு தொழிற்துறையின் சந்தைப்படுத்துதல் திறன்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் எச்ஜிஎச் இந்தியா எடுத்துள்ள முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

**எச்ஜிஎச் இந்தியா வீடியோவை காண QR குறியீட்டினை ஸ்கேன் செய்யவும்**

HGH INDIA 2021
HOME DECOR GIFTS HOUSEWARE

**வர்த்தக பார்வையாளர்களே!**
**20 நவம்பர் 2021**
www.hghindia.com தளத்தில்
ஆன்லைன் வழியாக
பதிவு செய்து பதிவு கட்டணத் தொகை
**₹1,000/- மிச்சப்படுத்துங்கள்**

*20 நவம்பர் 2021 ஆம் தேதிக்கு முன்னர் முன்பதிவு செய்யாதவர்களும் எச்ஜிஎச் இந்தியா 2021 நிகழ்ச்சியில் பங்கேற்கலாம் ஆனால் நேரில் வரும் போது நிகழ்விடத்தில் நுழைவு கட்டணமாக ரூ. 1,000/- செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும் (ஜிஎஸ்டி உடபட).

**மேலும் உதவிக்கு அழைக்கவும்**
அமர் ஷர்மா: +91 9967600286
இமெயில்: visitors@hghindia.com
மும்பை: தொலைபேசி: +91 (22) 2421 4111,
டெல்லி: தொலைபேசி. +91(11) 2571 4111
**www.hghindia.com**